செய்தி வெளியீடு எண்: 225 நாள்: 07.03.2019

## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர்கள் என பட்டியலிடப்பட்டுள்ள குடும்பன், பள்ளன், தேவேந்திரகுலத்தான், கடையன், பண்ணாடி மற்றும் காலாடி ஆகிய ஆறு சாதிகளையும் ஒன்றாக இணைத்து தேவேந்திரகுல வேளாளர் என்றழைத்தல் குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சட்டத் துறையின் அரசுச் செயலாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும், உறுப்பினர் செயலராக ஆதிதிராவிடர் நலத்துறையின் இயக்குநரையும் நியமித்து அரசாணை (நிலை) என்.21, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 04.03.2019–இல் ஆணையிடப்பட்டது. இக்குழு இன்று (07.03.2019) சென்னை ஆதிதிராவிடர் நல இயக்ககத்தில் தமது முதல் விசாரணையை துவங்கியது.

இவ்விசாரணைக்கு தேவேந்திரர் தன்னார்வ அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் திரு.ம.தங்கராஜ் வருகை புரிந்து அவருடைய கருத்துக்களை வழங்கியதுடன் கோரிக்கை குறித்த ஆவணங்களை குழுவிற்கு அளித்தார். மேலும், சென்னை பல்கலைக் கழக மானுடவியல் துறை பேராசிரியர் முனைவர் எஸ். சுமதி மற்றும் உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மைய இயக்குநர் முனைவர் ப. சுப்ரமணியம் ஆகியோரிடமும் குழு விசாரணை மேற்கொண்டு அவர்களது கருத்துக்களையும் பதிவு செய்தது. திரு. இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களும் தனது கருத்தை குழு முன்னர் பதிவு செய்தார்கள். உலகத் தமிழர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர், திரு. அக்னி சுப்ரமணியன் அவர்கள் குழுவிடம் தமது கோரிக்கை மனுவை அளித்தார். இக்குழுவானது மேற்கொண்டும் தொடர்புடையவர்களிடம் தமது விசாரணையைத் தொடரும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**